செ.வெ.எண்! 689 நாள்! 07.10.2009

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

நடப்பில் உள்ள குடும்ப அட்டைகளை 100% வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்து, போலி குடும்ப அட்டைகளை களையும் பணி சென்னை மாநகரில், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பெரம்பூர், திருவொற்றியூர், வில்லிவாக்கம், ஆவடி, தி.நகர், சைதாப்பேட்டை, பரங்கிமலை மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் 01.09.2009 முதல் துவக்கப்பட்டு, 30.09.2009க்குள் முடிக்க காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய எட்டு மண்டலப்பகுதிகளில் குடும்ப அட்டை தணிக்கை செய்யும் பணிக்கு 01.10.2009 முதல் 15.10.2009 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த தலத்தணிக்கைப் பணி ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய பணி நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல குடும்ப அட்டைதாரர்கள் வாரநாட்களில் பணிக்கு சென்று விடுவதால், தணிக்கையிலிருந்து விடுபட்டுள்ளதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் இப்பணிகள் மேற்கொண்டால் மேற்கூறியவாறு விடுபட்ட குடும்பங்களும் தணிக்கை செய்ய இயலும் என்பதால், 11.10.2009 முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தலத்தணிக்கைப் பணிகள் மேற்கொள்ளப்படும். தலத்தணிக்கை அலுவலர்களுக்கு திங்கட்கிழமை வார விடுமுறை அளிக்கப்படும். இந்த வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திக் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் தங்கள் வீடுகளிலிருந்து, தலத்தணிக்கைக்கு வரும் பணியாளர்கள் கோரும் விவரங்களை அளித்து குடும்ப அட்டை விடுபடாமல் தணிக்கை செய்யப்பட ஒத்துழைப்பு நல்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- க.ராசாராமன்
ஆணையாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

ஆணையாளருக்காக.